பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 08 புதன்கிழமை 23.12.2020 கதிர் 278

## சிறையில் பலியானோரின் பிரேத சோதனை அறிக்கை

மஹர சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த மேலும் 4 பேருடைய பிரேத பரிசோதனை அறிக்கை வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுடைய சடலங்களை தகனம் செய்வதா அல்லது புதைப்பதா என்பது தொடர்பில் இம்மாதம் 30 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை:

# பிரிட்டன் தூதுவர், ஐ.நா. பிரதிநிதியுடன் சுமந்திரன் எம்.பி. இன்று முக்கிய பேச்சு!

### கூட்டமைப்பின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தார்





**ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் என்றும், அதன் உள்ளடக்கம் மற்றும் அதற்கான ஆதரவுத் தளம் என்பன தொடர்பில் ஜனவரி மாதம் தீர்மானிக்கப்படும் என்றும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார்.**

2

## இலங்கையில் கட்டாய ஜனாஸா எரிப்புக்கு எதிராக சஜித் அணி அமைதிப் போராட்டம்!

### பொரளை பொது மயானத்துக்கு முன்னால்



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை கட்டாய எரிப்புக்கு உட்படுத்தும் அரசின் தீர்மா னத்தை எதிர்த்து,



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று அமைதிப் போராட்டம் நடத்தினர்.

2

## யாழ். மாநகர முதல்வர் வேட்பாளர் கூட்டமைப்பின் முடிவு சனியன்றே!

### இன்றைய கூட்டம் முடிவின்றி முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,டிசெ.23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் இன்றைய கூட்டம் முடிவு எதுவும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி, யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக் கான பாதீடு முன்னாள் முதல்வர் இம் மானுவல் ஆர்னால்ட் முன் வைத்த போது, அது 3 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டிருந் தது. இதனையடுத்து முதல்வர் பதவி வறிதாக் கப்பட்டது.

அந்தப் பதவிக்குத் தமிழ்த் தேசியக் +கூட்டமைப்பின் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம், மார்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத்

2

### பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளில் சிக்கல்:

## மாணவர்களின் அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரித்தது உயர்நீதிமன்றம்!

2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் வெட்டுப்புள்ளிகளில் ஏற்பட்ட சிக்கலில் அநீதி இழைக்கப்பட்ட 42 மாணவர்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பொறியியல் மற்றும் பௌதீகவியல் பீடங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதைத்

2

### மஹர சிறைச்சாலை வன்முறை:

## இறுதி விசாரணை அறிக்கை இம்மாதம் 30இல் சமர்ப்பிப்பு!

மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி விசாரணை அறிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி நீதி அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் தொடர்பாக ஆராய்வதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரியினால் ஐவரடங்கிய விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன செயற்பட்டார்.

2

## மட்டு மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 35 ஆயிரத்து 640 பேர் வரையில் பாதிப்பு

கிழக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 716 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் கே. கருணாகரன் தெரிவித்தார்.

கடந்த இரு நாள்களாகப் பெய்த அடைமழை காரணமாக மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2

## தவிசாளருக்குக் கொரோனாத் தொற்று: ஊடகவியலாளர்கள் தனிமைப்படுத்தல்

கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தவிசாளர் பங்கேற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இரு பிராந்திய ஊடகவியலாளர்கள் நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிகழ்வுகளுக்குச் சென்ற ஏனையவர்களின் விபரமும் திரட்டப்பட்டு அவர்களும் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய மீனவருக்கு எதிராக போராட வேண்டிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தி உள்ளது

### மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாச செயலாளர் ஆலம் விசனம்



இந்திய மீனவர்களின் வருகை தொடர்பான பிரச்சினைக்குப் பல வருடங்களைக் கடந்தும் நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். இறுதியாக 2016 பேசப்பட்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும் காலாவதியாகி விட்டன. ஆண்டுகளும் நிறைவடைந்து இன்று அதற்காக போராட வேண்டிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கின்றது என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இறுதி விசாரணை அறிக்கை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறைச்சாலை மோதலுக்கான காரணம் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்தொடர்பில் ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு அந்தக் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதன்படி விசாரணைகளை முன்னெடுத்த இக்குழு அண்மையில் இடைக்கால அறிக்கையைக் கையளித்தது. இந்தநிலையில், இந்த மோதல் சம்பவம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட முழு அறிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹர சிறைச்சாலை மோதலில் 11 கைதிகள் உயிரிழந்தனர். இரு சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 117 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர முதல்வர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் அரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா, பதில் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன் மற்றும் கட்சியின் பிரமுகர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றி விரிவாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அனைவரது கருத்துகளும் கேட்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 26 ஆம் திகதி (சனியன்று) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூடி முடிவு அறிவிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.

## பிரிட்டன் தூதுவர், ஐ.நா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் மற்றும் ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தரப் வதிவிடப் பிரதிநிதி ஆகியோருடன் இன்று நேரில் நடத்திய சந்திப்புகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று காலை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனை, கொழும்பிலுள்ள அவருடைய இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினேன். இரண்டு மணி நேரம் குறித்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கை மீது புதிய பிரேரணை கொண்டுவருவதில் பிரிட்டன் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது எனவும், எதிர்வரும் ஜனவரி மாதமே அந்தப் பிரேரணையின் உள்ளடக்கம் மற்றும் ஆதரவுத் தளம் தொடர்பில் முடிவெடுக்கப்படும் எனவும் தூதுவர் தெரிவித்தார்.

புதிய பிரேரணையானது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும், இலங்கை அரசு பொறுப்புக்கூறலிருந்து தப்பிப்பிழைக்க முடியாத வகையிலும் அமைய வேண்டும் எனவும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே பரிந்துரைகள் இருக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது என்று அவரிடம் சுட்டிக் காட்டினேன்.

அதேவேளை, குறித்த சந்திப்பின் பின்னர் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயத்துக்குச் சென்று ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தரப் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரை நேரில் சந்தித்து ஒரு மணி நேரம் கலந்துரையாடினேன். அவருடனும் புதிய ஜெனிவாப் பிரேரணை உட்பட சமகால விடயங்கள் தொடர்பில் விரிவாகப் பேசினேன். - என்றார்.

## இலங்கையில் கட்டாய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு, பொரளை பொது மயானத்துக்கு முன்னால் இந்த அமைதிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் அனைத்து இன மக்களினதும் இறுதிக்கிரியைகளை அவரவர் மத உரிமைகளைப் பேணி, நடத்துவதற்கு அரசு இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், ராஜித சேனாரத்ன, முஜிபுர் ரஹ்மான் மற்றும் முஸ்லிம், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 20 நாள் குழந்தை, பெற்றோரின் ஒப்புதல் இன்றி எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த இரு வாரங்களாக பொரளை பொது மயானத்துக்கு முன்னால் 'கபன் சீலை' கவனயீர்ப்புப் போராட்டமும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## மாணவர்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடுக்கக் கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட 42 மாணவர்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை விசாரணைக்கு உட்படுத்தாமல், நிராகரிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிகார, எஸ். துரைராஜா மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் முன்னிலையில் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

கடந்த வருடம் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் வெட்டுப்புள்ளிகளில் சிக்கல்கள் ஏற்பட்டன எனவும், அதன் காரணமாக அதிகமான மாணவ, மாணவிகள் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்துள்ளனர் எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாணவர்களின் இந்தப் பிரச்சினையைக் காரணம் காட்டி, ஆட்சிக்கு வந்த அரசு, இப்போது பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதில் பின்னிற்கின்றது எனப் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அநீதி இழைக்கப்பட்ட மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டு மாவட்டத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனடிப்படையில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 22 ஆயிரத்து 496 பேரும், கோறளைப்பற்று வாகரைப் பிரிவில் 5 ஆயிரத்து 689 பேரும், மண்முனை வடக்குப் பிரிவில் 5 ஆயிரத்து 37 பேரும், கோரளைப்பற்று வாழைச்சேனையில் ஆயிரத்து 285 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கோரளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் 464 பேரும், மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரிவில் 359 பேரும், கோறளைப்பற்று மேற்கு பிரிவில் 128 பேரும், பட்டிப்பளை பிரிவில் 97 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர்பற்று, செங்கலடி, மண்முனை மேற்கு, வவுணதீவு, போரதீவுப்பற்று, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு சிறியளவிலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்தநிலையில், இந்தத் தொடர் மழையால் 10 வீடுகள் பகுதியளவில் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் சுகாதார விதிகளுக்கமைவாக உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் மேலும் கூறினார்.

## இந்திய மீனவருக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்றைய தினம் புதன்கிழமை காலை மன்னாரில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

சம காலத்தில் வட மாகாணத்தில் - குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் - மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட 'புரெவி' புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் சில கிராமங்களில் இன்னும் உரிய அதிகாரிகளும் அமைச்சகங்களும் எட்டிப் பார்க்காத சூழ்நிலை காணப்படுகின்றது.

தேவன்பிட்டி தொடக்கம் மன்னார் வரையிலான பிரதேசங்கள் முழுமையாக கடற்தொழில் பிரதேசமாக காணப்படுகின்றது. கடற்கரையோரப் பிரதேசங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கடல் நீர் உட்புகுந்து உள்ளது. மீன் பிடிக்க பயன்படுத்தப்பட்ட மீன் பிடி உபகரணங்கள், படகுகள், படகு வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள், கொட்டுவாடிகள் என்பன சேதமடைந்துள்ளன. சிறிய அளவில் தொழில் செய்து வந்த மீனவர்கள் பெரிய அளவிலான பாதிப்புக்கு புரெவிப் புயல் புரட்டிப் போட்டுள்ளது.

இவ்வாறான பாதிப்புக்களை உரிய நேரத்தில், உரிய அதிகாரிகள் சென்று பார்வையிடும் போதுதான் அந்த மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். அல்லது தங்களைக் கவனிக்க அதிகார மட்டத்தில் ஆள்கள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும்.

ஆனால் இன்று வரை பல இடங்களில் பாதிக்கப்பட்ட அந்த மக்களைச் சென்று பார்க்காத நிலையை அங்குள்ள மக்களின் ஒவ்வொரு கருத்துக்களை சென்று கேட்கும் போது நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, விடத்தல் தீவு, பாப்பாமோட்டை, இலுப்பக்கடவை, அந்தோணியார் புரம் போன்ற கிராமங்களிலும் மன்னார் நகர பகுதிக்குள் பேசாலை தொடக்கம் காட்டாஸ்பத்திரி, எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு உள்ளிட்ட பிரதேசங்களிலும் கடல்நீர் உட்புகுந்ததால் மீனவர்களின் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டு மீன்பிடி உபகரணங்களும் அழிவடைந்து உள்ளன.

இன்று அதற்கான இழப்பீடு கிடைக்குமா என்பதற்கு அப்பால் தங்களைப் பார்வையிட்டு தங்களுக்கு ஆதரவை தெரிவிக்க கூட யாரும் வரவில்லை என்று அந்த மக்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

மாவட்ட மீனவர் சார்பாக நாங்கள் பல விடயங்களை பல நேரங்களில் தெரிவித்திருக்கின்றோம். சமீபத்தில் அரச அதிபரைச் சந்தித்த போதும் இந்த கருத்துக்களை நாங்கள் முன் வைத்தோம்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குப் பல வருடங்களை கடந்தும் முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். 10 வருடங்களுக்கு மேற்பட்ட பிரச்சினையாக இன்று காணப்படுகின்றது.

பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல விட்டுக் கொடுப்புக்கள் இடம் பெற்றன. இறுதியாக 2016 பேசப்பட்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆலாசனைகளும் ஆண்டுகளும் நிறைவடைந்து இன்று அதற்காக போராட வேண்டிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கின்றது.

சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை வெறும் காகித வடிவில் இருக்கின்றன. அவற்றை நடை முறைப்படுத்த அரசு தயங்குகிறது.

ஒரு செல்வந்த நாட்டிற்கு அல்லது சிறிய நாடு ஒரு செல்வந்த நாட்டிற்கு பயப்பிடுகின்றதா என்ற கேள்வியைக் கூட கேட்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

குறிப்பாக வளங்களை பொறுத்த மட்டில் மீன்பிடியோடு கரையோரங்களும் இன்று பல தேசியக் கம்பனிகளினால் சூறையாடப்படுகின்றன. கனிய வளம் என்ற அந்த மணல் அகழ்வின் போது வளங்கள் சூறையாடப்படுகின்றன.

மன்னார் மாவட்டம் தாழ்ந்த நிலையில் இருக்கின்றது. கடல் நீர் நிலத்தினுள் புகும் சூழலில் மன்னாரில் இருந்து மணல் அகழ்வு நடைபெறுமாக இருந்தால் இந்த நகரம் முற்று முழுதாக கடலின் சீற்றத்துக்கு உள்ளாகி கடல் நீர் உட்புகும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மீனவ சமூகத்தின் வாழ்விற்காக உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து நம்பிக்கையை மீனவ சமூகத்திடம் ஏற்படுத்துமாறு கேட்டு நிற்கின்றோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தவ் ஊடக சந்திப்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ் அவர்களும் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஊடக அடக்குமுறை அராஜகம்

தமிழர் தேசியத்தின் அடிப்படைக் கட்டுமானங்களைத் தகர்க்கும் தனது அரூபக்கரங்களைக் காட்டத் தொடங்கி விட்டது ராஜபக்ஷக்களின் கொடூர அரசு.

தென்னிலங்கையில் சமூக ஊடகங்களுக்கு எதிராகத் தனது கைவரிசையைக் காட்டும் பௌத்த, சிங்கள பேரினவாத அரசு, வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலித்து நிற்கும் ஊடகங்கள் மீது தனது மோசமான குரோதத்தை அப்பட்டமாகக் காட்டத் தொடங்கியிருக்கின்றது.

இலங்கையில் காலங்காலமாக – மோசமாக – தாக்குதலுக்கு இலக்காகி வருவது தமிழ் ஊடகத்துறைதான்.

யுத்தம் முடிந்த பின்னரும் தமிழ் ஊடகங்களுக்கு – குறிப்பாகத் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் ஊடகங்களுக்கு – எதிரான தனது கெடுபிடிப் போக்கை ராஜபக்ஷக்களின் அரசு கைவிடவில்லை.

யுத்தத்தின் போதும், பின்னரும் தமிழ் ஊடகங்களுக்கும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் எதிராகவே அதிக ஊடகக் கொடூரங்கள் அரங்கேறின. பல ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர். பல தமிழ் ஊடகவியலாளர்கள் கடத்திக் காணாமலாக்கப்பட்டனர். பலர் கடத்தித் தாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஊடக நிறுவனங்களினதும் ஊடகப் பணியாளர்களினதும் உடைமைகள் திட்டமிட்டு அழித்து நாசமாக்கப்பட்டன.

இப்படிக் கட்டவிழ்ந்த ஊடகக் கொடூரங்களின் சூத்திரதாரிகள் எவருக்கும் எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் தாக்கிக் கொடூரம் புரிந்த படுபாதகர்களுக்கு சட்ட விலக்களிப்பு வழங்கப்பட்டது. அவர்கள் இன்றும் சுதந்திர புருஷர்களாக – தேசிய வீரர்களாக – வலம் வருகின்றனர். தமிழ் ஊடகங்களுக்கு எதிராகப் புரியப்பட்ட கொடூரங்களுக்காக யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பொறுப்புக் கூறல் நிலை நாட்டப்படவில்லை.

ஊடகங்களுக்கு எதிரான அந்த கொடூர அராஜகத்தை கோட்டா அரசு புதிய வடிவத்தில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

கடந்த நவம்பர் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 66 ஆவது பிறந்தநாள் என்ற செய்தியை அவரது படத்துடன் வெளியிட்டமைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரமாகும் 'உதயன்' நாளிதழுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

அதுவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னாண்டோ தாமே நேரில் வழக்கைத் தொடுத்திருக்கின்றார். *"பிட்டுச் சாப்பிட்ட யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் 'பீட்ஸா' கொடுத்தோம்"* – என்று நீதிமன்றத்தில் கூறித் தமிழ் மக்களிடம் வாங்கிக் கட்டியவர் இவர்.

இந்த வழக்கில் இரண்டு விடயங்கள் வெளிப்படையானவை. அவை, இந்த விவகாரத்தில் பொலிஸார் அரசியல் தலைமைத்துவங்களின் அரூபக்கரங்களாகச் செயற்படுகின்றனர் என்பதை அம்பலப்படுத்தி நிற்பது கவனிக்கத்தக்கது.

ஒன்று – குறிப்பிட்ட செய்தி அன்றையதினம் தலைவர் பிரபாகரனின் 66 ஆவது பிறந்த தினம் என்ற தகவலை மட்டுமே செய்தியாகக் கூறுகின்றது. முன்னர் புலிகள் இருக்கும் வரை பெரும் எடுப்பில் அக்கொண்டாட்டங்கள் நடந்தன, 2009 இற்குப் பிறகு மறைவாக அது கொண்டாடப்பட்டு வருகின்றது, எனினும் 2016 இலிருந்து 2018 வரை பகிரங்கமாக அது நடைபெற்றது. தற்போதைய சூழலில் மறைவான இடங்களில் அந்தப் பிறந்த நாள் கொண்டாடப்படலாம் என்பதால் பாதுகாப்புத் தரப்பினர் தமது கண்காணிப்பை இறுக்கியுள்ளனர் – என்றே அந்தச் செய்தி விவரித்திருந்தது. இது முற்றும் முழுதாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒரு தகவல் செய்தி மட்டுமே. இதில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர எதுவுமே இல்லை என்பது வெளிப்படையானது.

அடுத்தது – இது போன்ற செய்தியை (யாழ் குடாநாட்டிலும் கூட) வெளியிட்ட பல பத்திரிகைகள் இருக்கின்றபோது 'உதயன்' நாளிதழை மட்டும் இலக்கு வைப்பது என்பது ராஜபக்ஷக்களின் உள்நோக்கத்தைத் துலாம்பரப்படுத்துகின்றது.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் 'உதயன்' நாளிதழுக்கு எதிராக இழைக்கப்பட்ட அரச பயங்கரவாதக் கொடூரங்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை; நியாயம் செய்யப்படவில்லை; இப்போது மீள நிகழாமையும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது பொலிஸாரின் இந்த நடவடிக்கை மூலம் அம்பலமாகின்றது.

வழக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்டிருப்பதால், அச் செய்தி பிரசுரத்துக்குப் பொறுப்பான பத்திரிகை ஆசிரியர் மற்றும் பிரசுரகர்த்தா போன்றோர் பிணை வழங்கப்படாத கைதுக்கு உள்ளாகும் ஆபத்து உண்டு.

இத்தகைய ஊடக அடக்குமுறைக்கு எதிராக இனம், மதம், மொழி, நிறுவனங்கள் கடந்து ஊடகத் தரப்புகளும் பொதுமக்களும், அரசியல்வாதிகளும், சட்டத் தரப்புகளும் ஒன்றுபட்டு நின்று, சம்பந்தப்பட்ட ஊடகத்துக்கும் அதன் செய்தியாளர்களுக்கும் தமது ஒற்றுமையான பலத்தைக் காட்டி, ஆதரவளிப்பது பத்திரிகைச் சுதந்திரத்தின் பெயரால் கடமையாகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கவேண்டும்!

## கரு ஜயசூர்யா வலியுறுத்தல்



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்கின்றமை தொடர்பாக இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு நியாயமானதும் விரைவானதுமான தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் எவ்வித விஞ்ஞான அடிப்படைகளையும் கொண்டிராத அதேவேளை, அதனால் எவ்வித பயனுமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் கொள்கை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார வழிகாட்டல்களுக்கு முற்றிலும் முரணானதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டின் பயனற்ற தன்மை தொடர்பில் பேராசிரியர் மலிக் பீரிஸும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, இந்த விவகாரத்தில் விஞ்ஞான பூர்வமாக முடிவொன்றுக்கு வருவதுடன், இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு விரைவான தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது!

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை நீடித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் கடந்த 20 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளபோதும் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்துக்கு அமைய பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக அதே ஆண்டில் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெடிக்காத மோட்டார் ஷெல் வவுனியாவில் மீட்கப்பட்டது!



வவுனியா, ஓமந்தை, அரசமுறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியில், மோட்டார் ஷெல் ஒன்று கடந்த (செவ்வாய்க்கிழமை) காலை மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

ஓமந்தை – அரசமுறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியில், வெடிபொருள் இருப்பது தொடர்பாக இலங்கை புலனாய்வு சேவைக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அந்தத் தகவலுக்கமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் அந்தப் பகுதியை சோதனையிட்டநிலையில், மோட்டார் ஷெல் ஒன்றை மீட்டுள்ளனர்.

இந்நிலையில், நீதிமன்றின் அனுமதியுடன் அந்த மோட்டார் ஷெல் செயலிழக்கச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரத்தில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் சாவு!

## துறை நீலாவணையில் சம்பவம்

களுவாஞ்சிகுடி – துறைநீலாவணை பகுதியில், மின்சாரத்தில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

கடந்த (திங்கட்கிழமை) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், துறைநீலாவணை 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகேசு புலேந்திரன் (வயது – 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளவர், இரும்புக் கத்தியை வீதியால் எடுத்துச் செல்லும்போது, வீதியின் அருகிலுள்ள மின்மாற்றியின் உயரழுத்தம் மின்சாரக்கம்பியில் தவறுதலாகப் பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த நபர், மின்சாரத்தால் தாக்கப்பட்டு வீதியில் இழுத்து வீசப்பட்டுள்ளார்.

இதனைக் கண்ணுற்ற பிள்ளைகள், உறவினர்கள் மின்சாரத்தால் தாக்கப்பட்ட அவரை, கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் துறைநீலாவணையில் சுமார் 20 நிமிடம் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.


இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம், கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.


**சமூக நல அறிவிப்பு**



# உங்கள் முகக்கவசத்தை மற்றவர்களுடன் பகிராதீர்கள்!

**இக்கட்டான இந்த காலப்பகுதி களில் இளஞ் சூட்டுடனான கொதித்தாறிய நீரினை அடிக்கடி குடிக்கப் பழக்கப்படுத்திக் கொள்வதுடன், நோயெதிர்ப்பு சக்தியைக் அதிகரிக்கக்கூடிய உணவுகளான பழங்கங்களையும், மரக்கறிகளையும், இலைவகைகளையும் உங்கள் நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.**





கொரோனா நோய் மாறுபட்ட அளவிலான நோய்களை ஏற்படுத்தக்கூடும், மேலும் நிமோனியா உள்ளிட்ட கடுமையான பாதிப்புகளுக்கு ஆளாகக்கூடிய வயதான பெரியவர்களுக்கும், தற்போதுள்ள உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கும் கொரோனா மிகவும் தொந்தரவாக இருக்கிறது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோருக்கு, கொரோனா வைரஸ் காய்ச்சல் மற்றும் இருமல் போன்ற லேசான அல்லது மிதமான அறிகுறிகளை மட்டுமே உருவாக்குகிறது, பெரும்பான்மை யானவர்கள் வைரஸிலிருந்து மீண்டு வருகின்றனர்.

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**



# பல்லாயிரக் கணக்கானோர் கொரோனாவால் சாகலாம்!

## எச்சரிக்கிறார் ஜோ பைடன்



அமெரிக்காவில் பல்லாயிரக்கணக் கான மக்கள் கொரோனாவால் உயிரி ழக்க நேரிடலாம் என ஜோ பைடன் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதி லளிக்கும் போதே அவர் இவ்வாறு எச்ச ரிக்கை விடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்:-

கொரோனா தடுப்பு மருந்து தயாரிக் கப்பட்ட போதிலும், கொரோனா தொற்று தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

எனவே பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு மேல் உயிரிழக்கலாம். அமெரிக்கர்கள் கவனமாக இருக்க வேண் டும். நான் கொரோனா தடுப்பு மருந்தின் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளேன்.

மக்கள் சமூக இடைவெளி மற்றும் முகக்கவசம் அணிய வேண்டும். அமெ ரிக்கா மிகப் பெரிய சவாலை எதிர்கொண் டுள்ளது. தடுப்பு மருந்தை மக்களிடம் சென்றடையும் முயற்சியில் தீவிரமாக இருக்க வேண்டும். அதிகமான மருத் துவ பரிசோதனைகளை செய்ய வேண் டும்.

கொரோனா தடுப்பு மருந்தை உரு வாக்குவதற்காக ஓய்வில்லாமல் உழைத்த விஞ்ஞானிகளுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்க மக்களே கொரோனா தடுப்பு குறித்து பயப்படுத்துவதற்கு ஒன்றும் இல்லை. தடுப்பு மருந்து இருப்பின் நீங்கள் அதனைத் தாராளமாக போட்டுக் கொள்ளலாம். - எனத் தெரிவித்துள் ளார்.

## மத்திய பிரான்ஸில் பெண் மீது தாக்கு: தடுக்கச் சென்ற பொலிஸார் மீது சூடு!

மத்திய பிரான்ஸில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொலிஸார் உயிரிழந்துள் ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி பிரயோகத்துக்கு இலக்கான நான்காவது பொலிஸ் உத்தியோகத்தர் காயம டைந்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு பிரயோகம் தொடர்பில், மத்திய பிரான்ஸின் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள தக வலில் குறித்த விடயங்கள் உறுதிப்படுத்தப்பட் டுள்ளன.

மேலும் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கு கிடைத்த தொலைபேசித் தகவலை அடுத்து பெண் ஒருவர் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலை தடுத்து நிறுத்தும் நோக்குடன் சம்பவ இடத்திற்கு சென்றனர் எனவும், இந்த நடவடிக்கையில் 48 வயதான துப்பாக்கிதாரி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இலக்காகி மூவரும் உயிரிழந்துள்ள னர் எனவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமெ. போர்க்கப்பல் அத்துமீறி நுழைவு மிரட்டி விரட்டினோம் என்கின்றது சீனா!



தென் சீனக்கடலில் அத்துமீறி நுழைந்த அமெ ரிக்க போர்க்கப்பல் விரட்டியடிக்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

தென் சீனக்கடலிலுள்ள பல்வேறு தீவுகளை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. எனினும், குறித்த தீவுகள் தங்களுக்குச் சொந்தமானவை என ஜப்பான், வியட்நாம், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கூறி வருகின்றன.

இந்த விவகாரத்தில் சீனாவுக்கும் இந்த நாடுகளுக் கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வரு கிறது.

தென் சீனக்கடல் விவகாரத்தில் சீனாவுடன் மோத லில் ஈடுபட்டு வரும் நாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந் தும் ஆதரவளித்து வருகின்றது.

மேலும் சீனாவை எச்சரிக்கும் விதமாக தென் சீனக்கடல் பகுதிக்கு அமெரிக்கா தனது போர்க்கப்பல் களை அனுப்பி போர் பயிற்சியில் ஈடுபடுவதை வழக்க மாக கொண்டுள்ளது.

இந்த நிலையில் தென் சீனக்கடல் பகுதியில் அத்து மீறி நுழைந்த அமெரிக்க கடற்படைக்குச் சொந்த மான போர்க்கப்பலை விரட்டியடித்துள்ளதாக சீன இரா ணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன இராணுவத்தின் தெற்கு பிரிவு படை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். ஜான் மெக்கெய்ன் போர்க்கப்பல் சீன அரசாங்கத்தின் அங்கீகாரம் இன்றி சீனாவின் நான்ஷா தீவு அருகே கடலுக்குள் நுழைந்தது.

இதனையடுத்து சீன இராணுவ தெற்கு பிரிவு படையின் போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்கள் அமெரிக்க போர்க்கப்பலை எச்சரித்து விரட்டி அடித்தன. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் - பிரித்தானியா இடையிலான போக்குவரத்து சேவைகள் மீள ஆரம்பம்

பிரான்ஸ் -பிரித்தானியா நாடுகளுக்கிடையிலான போக்கு வரத்து சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் ஏற்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான அச்ச நிலையை அடுத்து மூடப் பட்டிருந்த எல்லைகளைத் திறக்க பிரான்ஸ் அரசாங்கம் ஒப்புதல் அளித்தமையைத்தொடர்ந்து இன்று காலை முதல் இரு நாடுகளுக்கும் இடையிலான கடல், தரை மற்றும் ஆகாய மார்க்கமான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கொரோனா பரிசோதனையில் ஈடுபடுத்தப்பட்ட பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய பிரஜைகள், தமக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படாவிட்டால் இவ் விரு நாடுகளுக்கும் இடையில் பயணம் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பயணிகளுக்கான கொரோனா பரி சோதனை மேற்கொள்ளும் பணியில், தேசிய சுகாதார சேவை பணியாளர்களுடன் இராணுவ வீரர்களும் கைகோர்த் துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்துக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தடை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் தடைப்பட்டிருந்த நிலையில் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 50 நாடுகள் வரையில் பிரித்தானியா வுடனான போக்குவரத்து தடையைத் தொடர்ந்தும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு வருடத்தில் நான்காவது தேர்தல்!

### எதிர்நோக்குகின்றது இஸ்ரேல்



இஸ்ரேல் அரசாங்கத்தால் முன்வைக் கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பான பேச்சுகள் தோல்வியடைந்துள்ளமையைத் தொடர்ந்து, புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் இந்தத் தேர்தல் எதிர் வரும் மார்ச் மாதம் இடம்பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் அரசாங்கத்தால் முன்வைக் கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பான பேச்சுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) தோல்வியடைந்தன.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பல அழுத்தங்களை எதிர்நோக்கி வருகிறார் என சர்வதேச செய்தி கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவின் லிக்குட் கட்சி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பெனி கேன்ட்ஸ்'ஸின் ப்ளூ அண்ட் வைட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இணைந்து கடந்த மே மாதம் கூட்டு அரசாங் கத்தை அமைத்தன.

எனினும் 2021 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக கூட்டணிக்குள் முரண்பாடுகள் நிலவி வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த விடயம் தோல் வியில் முடிவடைந்திருந்தது.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்த லானது கடந்த இரண்டு வருடகாலத்தில் நடை பெறும் நான்காவது தேர்தல் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் பேனாட் மதுரநாயகம் நினைவுக்
கவிதைப் போட்டி
போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்
1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை)
"கை கழுவினார்கள்....."
2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது)
"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."
பரிசுத் தொகை:

| பாடசாலை மணவர்களுக்கு | பெரியவர்களுக்கு |
| --- | --- |
| 1ம் பரிசு - 3000/= | 1ம் பரிசு - 5000/= |
| 2ம் பரிசு - 2000/= | 2ம் பரிசு - 3000/= |
| 3ம் பரிசு - 1000/= | 3ம் பரிசு - 1000/= |

- 30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்.
- நிச்சயம் சுயமாக வரைந்த, தனது சொந்த கையெழுத்துடன்
- அனுப்பிவைக்க வேண்டும்.

நோக்கம் : -
காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க
இறுதித் திகதி: - 31.12.2020
போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.
உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.
ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி
தபால் :-
அமரர் பேனாட் நினைவுக் கவிதைப்போட்டி
காலைக்கதிர்
இல. 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- kalaikkathiradvt@gmail.com

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை





மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1983.06.08
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - விசாகம் 2
சூ/செவ் - 02இல்
பாவம் - 28
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - படித்த அழகான உத்தியோகப் பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1994.05.28
மதம் - இந்து K
நட்சத்திரம் - பூராடம்
பாவம் - 05
செவ் - ------
கல்வி - A/L
தொழில் - -------
எதிர்பார்ப்பு - வெளிநாடு.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# குஜராத்தில் சிங்கம் தாக்கி 14 வயது சிறுமி உயிரிழப்பு



குஜராத்தில் வனப்பகுதியில் நடந்து சென்ற 14 வயது சிறுமியை சிங்கம் கடித்துக் கொன்றது.

ஜுனாகத் மாவட்டத்தின் வந்தாலி என்ற இடத்தில் பண்ணையில் வேலை செய்த இரு சிறுமிகள் வனப்பகுதியைக் கடந்து சென்றனர். அப்போது, சிங்கம் ஒன்று அவர்களைத் தாக்கியது.

அவர்களில் ஒரு சிறுமி அருகில் இருந்த தண்ணீர் தொட்டிக்குள் குதித்து உயிர் தப்பினார். ஆனால் பாவ்னா பரியா என்ற 14 வயது சிறுமியை சிங்கம் இழுத்துச் சென்றது.

தகவலறிந்த வனத்துறையினர் தேடிய போது சிறுமியின் சிதைந்த உடல் பாகங்கள் மீட்கப்பட்டன.

# ஒக்ஸ்போர்ட் கொரோனாத் தடுப்பூசிக்கு இந்திய மத்திய அரசு வரும் வாரம் அனுமதி!

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், ஆஸ்ட்ராஜெனகா நிறுவனத்துடன் சேர்ந்து உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பூசிக்கு இந்திய மத்திய அரசு அடுத்த வாரம் அவசரகால பயன்பாட்டுக்கான ஒப்புதலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தடுப்பூசிக்கு கோவிஷீல்டு என பெயரிட்டு, புனேயில் உள்ள சீரம் இந்தியா நிறுவனம் தயாரித்துள்ளது. தடுப்பூசியின் இறுதிக்கட்ட சோதனை முடிவுகள் மருந்து கட்டுப்பாட்டுத் துறையிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எதிர்பார்த்தபடி ஒப்புதல் வழங்கப்பட்டால், இந்தத் தடுப்பூசிக்கு உலகில் ஒப்புதல் வழங்கும் முதல் நாடாக இந்தியா இருக்கும். இதனிடையே பைஸர் மற்றும் பாரத்பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் தடுப்பூசிகளுக்கும் அவசரகால அனுமதி வழங்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.




ஆனால் கோவிஷீல்ட் விலை குறைவானது என்பதுடன், இந்திய பருவ நிலைக்கு பொருத்தமானது என்பதால் அதற்கே மத்திய அரசு முன்னுரிமை வழங்கும் எனவும் கருதப்படுகிறது.

# பாதிரியாருக்கும்,கன்னியாஸ்திரிக்கும் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை!

கேரளாவில், கன்னியாஸ்திரி கொலை வழக்கில், 28 ஆண்டுகளுக்கு பின், பாதிரியார் தாமஸ் கோட்டூர், கன்னியாஸ்திரி செபி ஆகியோர் குற்றவாளிகள் என, நீதிமன்றம் அறிவித்தது. இருவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கி திருவனந்தபுரம் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரளாவிலுள்ள கோட்டயத்தில், ஒரு கிறிஸ்தவ பள்ளி வளாக கிணற்றில், கன்னியாஸ்திரி அபயா(வயது21) கடந்த 1992 இல் பிணமாகக் கிடந்தார். விசாரணை நடத்திய பொலிஸார் தற்கொலை என முடிவுக்கு வந்தனர். பின், இதுதொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணை கமிஷன் பரிந்துரையின்படி வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது. தீவிர விசாரணையில், பாதிரியார் தாமஸ் கோட்டூர் மற்றும் கன்னியாஸ்திரி செபி ஆகியோர், ஒன்றாக இருந்ததை அபயா பார்த்துள்ளார். இதனால், அபயாவின் தலையில் தாமஸ் தாக்கி உள்ளார். இதில் மயக்கம் அடைந்த அவரை கொலை செய்து, தாமஸும், செபியும், உடலைக் கிணற்றில் வீசியமை தெரியவந்தது.

இதையடுத்து தாமஸ், செபி மற்றும் உடந்தையாக இருந்ததாக பாதிரியார் ஜோஸ் புத்ரிகாயில் ஆகியோரை



சி.பி.ஐ. அதிகாரிகள் கைது செய்தனர். வழக்கின் விசாரணை திருவனந்தபுரம், சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றத்தில் நடந்தது. இதற்கிடையே, பாதிரியார் ஜோஸ் புத்ரிகாயில் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

### தண்டனை விவரம்

பாதிரியார் தாமஸ், கன்னியாஸ்திரி செபி ஆகியோர் மீதான கொலை வழக்கின் விசாரணை முடிவுக்கு வந்ததால், இருவரும் குற்றவாளிகள் என, நீதிபதி அறிவித்தார். அவர்களுக்கான தண்டனை விபரம் இன்று அறிவிக்கப்பட்டது. இருவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கிய நீதிமன்றம் இருவருக்கும் தலா ரூ.5 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. இதன்படி, கொலை நடந்து, 28 ஆண்டுகளுக்கு பின், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

# சசிகலாவுடன் சிறையிருக்கும் சுதாகரன் நாளை விடுதலை?

ஜெயலலிதா மற்றும் சசிகலாவுடன் சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை விதிக்கப்பட்ட சுதாகரன் அபராதத் தொகையை இன்று செலுத்த இருக்கிறார் எனவும், நாளை அவர் விடுதலை செய்யபடலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

4 ஆண்டு சிறைத் தண்டனையும், 10 கோடியே 10 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு சசிகலா, இளவரசி, சுதாகரன் கர்நாடக மாநில பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.



ஏற்கெனவே 92 நாள் சிறையிலிருந்ததை சுட்டிக்காட்டி, சுதாகரன் தாக்கல் செய்த மனுவை விசாரித்து, அவரை முன்கூட்டியே விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து நீதிமன்றத்தில் இன்று அவர் அபராதம் செலுத்த இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

**24.12.2020 வியாழக்கிழமை**

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

# புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறப் போவதில்லை

## மத்திய அமைச்சர் தோமர் திட்டவட்டம்



புதிய வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற முடியாது என மத்திய வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

புதிய வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரி டெல்லியில் நவம்பர் 26 முதல் விவசாயிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மத்திய அரசுடன் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்திய பின்னும் இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், மிகப் பெரிய சீர்திருத்தத்தைக் கொண்டுவரும் போது முதலில் கேலி செய்வதும், பின்னர் எதிர்ப்பதும், இறுதியில் அதை ஏற்றுக்கொள்வதும் வழக்கம் எனத் தெரிவித்தார்.

இத்தகைய நடைமுறைதான் இப்போது நடந்துகொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# உ.பியில் உரத் தொழிற்சாலையில் நச்சு வாயுக் கசிவு; இருவர் மரணம்

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் அருகே உள்ள இப்கோ உரத்தொழிற்சாலையில் அமோனியா வாயு கசிந்ததில் இருவர் உயிரிழந்தனர். 15 பேர் மயக்கமடைந்தனர்.

பிரயாக்ராஜ் அருகே புல்பூரில் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் தொழிற்சாலை உள்ளது. இந்த ஆலையில் நேற்றிரவு பதினொன்றரை மணி அளவில் அமோனியா வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளது.

இதையறிந்த இரவுப் பணித் தொழிலாளர்கள் பலர் விரைந்து வெளியேறினர். எனினும் உதவி மேலாளர், துணை மேலாளர் ஆகியோர் வாயுக் கசிவால் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

மயக்கமடைந்த தொழிலாளர்கள் 15 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து நேர்ந்த தொழிற்சாலையில் வாயுக் கசிவு முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# ரஜினியின் படப்பிடிப்புக் குழுவினரில் எண்மருக்குக் கொரோனாத் தொற்று

தமது படக்குழுவினர் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதால் ‘அண்ணாத்த’ படப்பிடிப்பு நிறுத்தப்பட்ட நிலையில், நடிகர் ரஜினி கொரோனா சோதனை செய்து தனிமைப்படுத்திக் கொண்டார்.

நடிகர் ரஜினிகாந்த் அடுத்த மாதம் தனிக் கட்சி தொடங்கி அரசியலில் ஈடுபட இருப்பதால், அதற்கு முன்பாக தனது காட்சிகளை படமாக்கி முடித்து விடும்படி ‘அண்ணாத்த’ படக்குழுவினரை அறிவுறுத்தினார்.

இதையடுத்து கொரோனா பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் நிறுத்தப்பட்ட படப்பிடிப்பு 9 மாதங்களுக்கு பிறகு கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதி ஐதராபாத்தில் மீண்டும் தொடங்கி நடந்து வந்தது. இதில் ரஜினி, குஷ்பு, நயன்தாரா, மீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், படப்பிடிப்பில் 8 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதால் ‘அண்ணாத்த’ படத்தின் ஷூட்டிங் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதையடுத்து படக்குழுவினர் அனைவருக்கும் கொரோனா சோதனை செய்யப்பட்டது. இதில் ரஜினிக்கு நெகட்டிவ் என தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து ஐதராபாத்தில் நடிகர் ரஜினிகாந்த் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் விரைவில் ரஜினி சென்னை திரும்ப இருக்கிறார்.




# தடுப்பூசியை விரைவில் கொண்டுவர ஜனாதிபதி திட்டவட்டமான உத்தரவு



கொழும்பு, டிசெ.24

கொவிட்- 19 தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டுவருவதை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் தடுப்பு குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் கொவிட் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி பற்றி விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், இந்த நாடுகள் மற்றும் இலங்கையின் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கஜனாதிபதியின்தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்கவுக்கு இதன்போது அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய குழுக்கள் பற்றி தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தோட்டங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் விடுதிகள் உட்பட நோய் பரவும் அதிக ஆபத்தில் உள்ள இடங்கள் மற்றும் குழுக்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் இந்த கலந்துரையாடலின்போது இங்கிலாந்தில் பரவி வரும் கொவிட் 19 புதிய வைரஸின் காரணமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு பயணிகள் வருகின்றமையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவு செய்தார்.

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வரவுள்ள பயணிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டு சுகாதாரத் துறையின் முழுமையான கண்காணிப்பின் கீழ் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்கள் மேலும் 14 நாள்களுக்கு தங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

லண்டனில் இருந்து வரும் சரக்கு விமானங்களின் பணிக் குழுவினரும் தனிமைப்படுத்தல் செயல்முறைக்கு உட்படுவர் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே, நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதான, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகாரிகள் மற்றும் கொவிட் குழு உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.



# அநாவசிய மக்கள் நடமாட்டத்தை பண்டிகைக்காலத்தில் தவிர்க்கவும்!

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் அநாவசியமான நடமாட்டங்களைத் தவிர்த்துசுகாதாரபிரிவினருக்குஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்

யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள கொரோனா நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

தற்போது யாழில் கொரோனாத் தொற்று பரவுகின்ற வீதம் சற்று குறைவடைந்து வருகிறது.

சுகாதார அதிகாரிகளின் சேவை காரணமாகவும் பொதுமக்களுடைய ஒத்துழைப்பாலும் யாழ். மாவட்டத்தில் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அபாய நிலை இன்னும் நீங்கிவிடவில்லை.

ஆகவே இது ஒரு பண்டிகை காலமாக இருக்கின்ற காரணத்தினால் சைவ ஆலயங்களிலும் விரத பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

நத்தார் தினம் மற்றும் புதுவருட கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன. பொதுமக்கள் தங்களுடைய அன்றாட நடவடிக்கைகளை மிகவும் கவனமாகச் செயற்படுத்த வேண்டும்.

அநாவசியமாக கடைகளுக்குச் செல்லுதல், அல்லது குழந்தைகளை அழைத்துக்கொண்டு கடைக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். அநாவசியமான ஒன்றுகூடல்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சுகாதார பிரிவினுடைய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றி முகக்கவசம் அணிந்து, அதேபோல தொற்று நீக்கி திரவங்களை பாவித்து தங்களுடைய கடமைகளைப் புரிதல் அவசியம்.

இதேநேரம், அநாவசியமான நடமாட்டங்களைத் தவிர்த்தல் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். மேலும் இந்தக் காலம் மிக அபாயமான காலமாக இருக்கின்றமையால் அனைவருடைய ஒத்துழைப்பும் இந்த விடயத்துக்குத் தேவை. - என மேலும் தெரிவித்தார்.

## மதுபானசாலைகள் மூடுவது தொடர்பாக எந்தத் தீர்மானங்களும் இதுவரை இல்லை

மதுபானசாலைகளை மூடுவது தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மதுபானசாலைகள் சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் தற்போது வரை இயங்கி வருகின்றன என கலால் திணைக்கள பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகைக் காலங்களில் மதுபான சாலைகளை மூடுமாறு சில குழுக்கள் ஊடகங்கள் மூலம் கோரிக்கைகள் விடுத்து வருகின்றமையை சுட்டிக்காட்டிய அவர், இலங்கையில் முதல் கொரோனா வைரஸ் அலையின் போது மதுபானசாலைகள் மூடப்பட்டன எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் மதுபானசாலைகள் மீள மூடப்பட்டால் அவ்வாறானதொரு நிலை உருவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது நாட்டில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஊரடங்கு உத்தரவின் கீழ் உள்ள அனைத்து பகுதிகளிலும் மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த பகுதிகளைத் தவிர பண்டிகைக் காலங்களில் மதுபானசாலைகளை மூட எந்த நடவடிக்கை -யும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கக் கூடாது!

### ஞானசாரர் அக்கறைப் பேச்சு



முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முட்டாள்தனமான தீர்மானத்தின் பின்னணியில் பௌத்த தேரர்கள் இருக்கின்றனர் எனப் பலரும் கருதுகின்றார்கள். ஆனால் அது உண்மையல்ல என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டில் தமிழர்களுடன் பிரச்சினையொன்றைத் தோற்றுவித்துக் கொண்டமையைப் போன்று, மீண்டும் இந்த விவகாரத்தின் ஊடாக பிரச்சினையொன்றைத் தோற்றுவிக்கும் வகையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, முஸ்லிம்களின் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொதுபலசேனா அமைப்பால் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுகின்றமையை எதிர்த்து அண்மையில் லண்டனில் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதில் 'இலங்கையில் காவித்துணி அணிந்தவர்களின் பேச்சை ஜனாதிபதி கேட்கக்கூடாது' என்று ஒருவர் கூறுகின்றார். இதன்மூலம் வெளிப்படுவது என்ன? இந்த நாட்டில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதை பௌத்த பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்ற அர்த்தத்தை அல்லவா அது ஏற்படுத்துகின்றது?

இங்கு பௌத்த பிக்குகள் எவரும் வைரஸ் தொடர்பில் விஞ்ஞான ரீதியில் தேர்ச்சி பெற்றவர்களல்லர். நாம் இதுதொடர்பாகக் கருத்து வெளியிடவுமில்லை. ஆனால் தற்போது முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதை பௌத்த பிக்குகளே எதிர்க்கின்றார்கள் என்றே மக்கள் கருதுகின்றார்கள். அதன் விளைவாக நாம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினதும் வெறுப்பிற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. மாறாக அரசியல்வாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

இந்த அரசாங்கம் மேற்கொள்கின்ற முட்டாள்தனமான தீர்மானங்களால் இத்தகைய விளைவுகளே ஏற்படுகின்றன. நாம் முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் மதரீதியான நம்பிக்கையின் மீது மண்போடக் கூடாது. அண்மைக் காலத்தில் ரியா சட்டம், ஹலால், காதி நீதிமன்றம், இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்குகள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. ஆனால் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் இனரீதியான தீர்மானமொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

இது விடயத்தில் எவ்வித முறையான செயற்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. தகுதி வாய்ந்த நிபுணர்கள் குழுவை நியமித்து, அவர்களின் பரிந்துரைகளைக் கேட்டறிய வேண்டும். அதேபோன்று இந்த விகாரத்தில் மதத் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். முதலில் சடலங்களைத் தகனம் செய்ய வேண்டும் என்கிறார்கள். பின்னர் குளிரூட்டியில் வைக்கவேண்டும் என்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் தமிழர்களுடன் பிரச்சினையொன்றைத் தோற்றுவித்துக் கொண்டதைப் போன்று, மீண்டும் இந்த விவகாரத்தின் ஊடாக பிரச்சினையொன்றைத் தோற்றுவிக்கும் வகையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே தனி நபர்களின் நிலைப்பாடுகளைக் கவனத்திற்கொள்ளாமல், இதுதொடர்பாக அரசாங்கம் பரந்துபட்ட ரீதியில் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இந்த பூமியிலிருந்து முத்தியை பெறுவதற்கு நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் நம்புகின்றார்கள். எனவே, வரையறுக்கப்பட்ட அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ள முடியாது. அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, முஸ்லிம்களின் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கக் கூடாது.- என்றார்.

## எந்தச் சூழ்நிலையிலும் துறைமுகம் மூடப்படாது!

எந்த சூழ்நிலையிலும் கொழும்பு துறைமுகம் மூடப்படாது என்று இலங்கை துறைமுக ஆணையத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஓர் ஊடகக் கூட்டத்தில் பேசிய அவர், துறைமுக சேவைகள் ஓர் அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது, மேலும் அதன் செயற்பாடுகள் முழுவதும் தொடரும்.

இந்த துறைமுகம் ஆண்டு முழுவதும் 24/7 செயல்படும் ஒரு ஸ்தாபனமாகும், இலங்கையை உலகின் பிற பகுதிகளுடன் இணைக்கும் இரண்டு நிறுவனங்களும் துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகும்.

விமான நிலையம் ஓரளவு மூடப்பட்டிருந்தாலும் துறைமுகம் மூடப்படவில்லை, எந்த சூழ்நிலையிலும் மூட அனுமதிக்கப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார்.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2020 இல் வெளியிடப்பெற்றது.